# அறிவித்தல் C

e-Chamber எனும் சபாமண்டப முகாமைத்துவ தகவல் முறைமை கருத்திட்டத்தின் கீழ் அனைத்து கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்களின் மேசைகளுக்கும் மடிக்கணனியொன்று பொருத்தப்பட்டுள்ளது.

கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்களினால் பாராளுமன்றத்தில், விசேடமாக சபாமண்டபத்தினுள் அவர்களது செயற்பாடுகளை மேலும் வினைத்திறனாகவும் செயற்றிறனாகவும் மேற்கொள்வதற்கு உதவி புரிவதே இக்கருத்திட்டத்தின் நோக்கமாகும். தற்போதைக்கு கௌரவ உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டிருக்கும் பயனர் பெயர் மற்றும் கடவுச்சொல் (Username and Password) இனைப் பயன்படுத்தி இம்முறைமைக்குள் உட்பிரவேசிக்கலாம்.

அனைத்து கணினிகளும் கியொஸ்க் (KIOSK) முறையில் நிறுவப்பட்டுள்ளதுடன், இதன் மூலம் கௌரவ உறுப்பினர்களின் செயற்பாடுகளை திறன்பட செய்வதற்கு தேவையான தரவுகள் உட்பட இணையம் மற்றும் மின்னஞ்சல் சேவைகளைப் பெற்றுக்கொள்ள இயலுமாகவுள்ளதுடன் இவ்வளவு காலமும் சபாமண்டபத்தினுள் நிறுவப்பட்டிருந்த வை-பை

(Wi-Fi) ஊடாக இது வலையமைப்பு செய்யப்பட்டுள்ளது.

இக்கருத்திட்டத்தினால் கௌரவ உறுப்பினர்களுக்கு கீழ்வரும் சேவைகளைப் பெற்றுக் கொள்ள முடியும்:-

- சட்டவாக்க தகவல்கள் -
  - உறுப்பினரினால் சமர்ப்பிக்கப்பட்ட சட்டமூலங்கள் மற்றும் மனுக்கள் பற்றிய தகவல்கள்
  - அவர்களினால் கேட்கப்பட்ட வினாக்கள் மற்றும் அவற்றிற்கு அளிக்கப்பட்ட பதில்கள்
  - எதிர்வரும் நாட்களில் கேட்பதற்குள்ள வினாக்கள் மற்றும் அவற்றிற்கு ஒதுக்கப்பட்டுள்ள நாட்கள்
- தனிப்பட்ட தகவல்கள் -
  - சம்பள விபரம், வரவு விபரம் போன்றவை
- குறித்த தினத்திற்கான தகவல்கள் -
  - பாராளுமன்ற ஒழுங்குப்பத்திரம், தினத்திற்கான நிகழ்ச்சி நிரல், ஒழுங்குப் புத்தகம், அனுபந்தம் போன்றவை
  - சமர்ப்பிக்கப்பட்ட குழு அறிக்கைகள், வேறு அரச அறிக்கைகள் மற்றும் வர்த்தமானி அறிவித்தல்கள் போன்றவை
  - குறித்த தினத்தில் நடைபெறுகின்ற குழுக் கூட்ட நிகழ்ச்சி நிரல் மற்றும் நேரங்கள்
- ஆவணக் காப்பக தகவல்கள் -
  - ஹன்சாட் அறிக்கைகள், குழு அறிக்கைகள் போன்றவை

- இதற்கு மேலதிகமாக, இணைய மற்றும் மின்னஞ்சல் சேவை வசதிகளையும், மேலும் வெவ்வேறுபட்ட தகவல்களையும் கௌரவ உறுப்பினர்களின் ஆசனங்களிலிருந்தவாறே பெற்றுக் கொள்ளலாம்.

இம்முறைமை பற்றிய வழிகாட்டல் குறிப்பொன்று ஏற்கனவே அனைத்து கௌரவ உறுப்பினர்களின் மேசைகளிலும் வைக்கப்பட்டுள்ளது. மேலதிக விபரங்கள் தேவைப்படின் தொலைபேசி நீடிப்பு 6581 மூலம் பாராளுமன்ற தகவல் முறைமைகள் மற்றும் முகாமைத்துவத் திணைக்கள உதவி மைய ஒருங்கிணைப்பாளரை தொடர்பு கொள்ளலாம்.

அவ்வாறே, இம்முறைமையைப் பயன்படுத்துவது தொடர்பில் மேலதிக பயிற்சி ஏதும் தேவைப்படின், பாராளுமன்ற தகவல் முறைமைகள் மற்றும் முகாமைத்துவத் திணைக்களத்தினால் ஏற்பாடு செய்து தர முடியும்.

பாராளுமன்றத்தினால் வழங்கப்பட்டுள்ள இந்த கணினிகளை உங்கள் தனிப்பட்ட சொத்தாக கருதி கரிசனையாகவும் பாதுகாப்பாகவும் பயன்படுத்துமாறும், நீண்ட காலத்திற்கு இச்சேவையை வழங்குவதற்கு உங்களாலான பூரண ஆதரவை நல்குமாறும் தயவாய் கேட்டுக் கொள்கிறேன்.

இக்கருத்திட்டத்தின் மூலம் வழங்கப்படுகின்ற சேவைகள் உங்கள் பாராளுமன்றக் கடமைகளை மேலும் இலகுவாகவும் திறமையாகவும் மேற்கொள்வதற்கு உதவியாக இருக்கும் என நான் நம்புகின்றேன்.